**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கரூர்.**
**முன்னிலை:- M.சார்லஸ் ஆல்பர்ட், B.Com., B.L.,**
**நீதித்துறை நடுவர் எண்.2 கரூர்**

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம், ஆனி திங்கள் 25-ஆம் நாள்
**2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09-ஆம் நாள் வியாழன்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.70/2024**
**CNR NO. TNKR02-001156-2024**

| | | |
|---|---|---|
| 1. | Name of the court | Judicial Magistrate No.2,Karur. |
| 2. | Name of the Judge | Thiru. M. Charles Albert, B.Com., B.L., |
| 3. | Date of Judgment | 09.07.2026 |
| 4. | Case Number along with CNR Number | CC 70 /2024<br>CNR.NO.**TNKR02-001156-2024** |
| 5. | Name of the Parties of the case | Inspector of Police<br>Velayuthampalayam Police Station<br>/Vs/<br>1.Murali, S/o.Sadaiyan<br>2.Selvam(Selvakumar) S/o.Shanmugam |
| 6. | Date of Occurrence | 29.07.2020 |
| 7. | Date of Complaint | 29.07.2020 |
| 8. | Date of Arrest if any and Remand | Nil |
| 9. | Period of remand of the accused | Nil |
| 10. | Date of Release on bail | A2-26.08.2020<br>(As per the order of Hon'ble Madurai Bench of Madras High Court in Crl.OP(MD) No.8115/2020dt:04.08.2020 u/s.438 of Cr.P.C |
| 11. | Date of Final report | 12.02.2024 |
| 12. | Date of Committal of the case to the Court of Session | NIL |

<table>
<tr><td>13.</td><td>Date of questioning of the accused U/s. 254 of Code of Criminal Procedure</td><td colspan="3">03.02.2026</td></tr>
<tr><td rowspan="2">14.</td><td rowspan="2">Date of examination in Chief and Cross examination of the witness</td><td>No. of. Witness</td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW1<br>PW2</td><td>10.06.2026<br>10.06.2026</td><td>10.06.2026<br>10.06.2026</td></tr>
<tr><td>15.</td><td>Date of filing of all miscellaneous petitions and their results including the results on challenge before Superior Courts except routine petitions like petition under section 317 of the Code</td><td colspan="3"><table><tr><td>Party</td><td>Nature of Petition</td><td>CrlM.P/ M.P.No.</td><td>Result</td></tr><tr><td>Prosecution</td><td>Petition filed u/s.348 of BNSS</td><td>8/26</td><td>Allowed on 10.06.2026</td></tr></table></td></tr>
<tr><td>16</td><td>Date of examination of the accused U/s. 313 of the Code</td><td colspan="3">18.06.2026</td></tr>
<tr><td>17.</td><td>Details of abscondence of an accused and his appearance/production as the case may be</td><td colspan="3">Nil</td></tr>
<tr><td>18.</td><td>Grant of stay by Superior Courts and the results thereof</td><td colspan="3">Nil</td></tr>
<tr><td>19.</td><td>Date of Commencement of Trial</td><td colspan="3">18.03.2026</td></tr>
<tr><td>20.</td><td>Date of closure of Trial</td><td colspan="3">18.06.2026</td></tr>
<tr><td>21.</td><td>Date of Sentence or order</td><td colspan="3">09.07.2026</td></tr>
<tr><td>22.</td><td>Date of service of copy of judgment to the accused</td><td colspan="3">09.07.2026</td></tr>
<tr><td>23.</td><td>If any delay, give explanation</td><td colspan="3">No</td></tr>
</table>

| | |
|---|---|
| புகார்தாரர் | அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>வேலாயுதம்பாளையம் காவல் நிலையம்,<br>கா. நி. கு. எண்.486/2020 |

| | |
|---|---|
| எதிரிகளின் பெயர் | 1. முரளி,<br>த/பெ.சடையன்,<br>தோட்டக்குறிச்சி,<br>புகளூர் தாலுக்கா,<br>கரூர் மாவட்டம்.<br><br>2. செல்வம்(செல்வக்குமார்),<br>த/பெ.சண்முகம்,<br>தோட்டக்குறிச்சி,<br>புகளூர் தாலுக்கா,<br>கரூர் மாவட்டம். |
| அரசு தரப்பில் எதிரியின் மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 379 IPC |
| நீதிமன்றத்தால் எதிரியின் மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 379 IPC |
| எதிரியின் பதில் | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் முடிவு | குற்றவாளி |
| அரசு கூடுதல் குற்ற வழக்கறிஞர் | செல்வி R. முருகேஸ்வரி, B.A., B.L(Hons)., |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு.V.S.விக்னேஷ்வரன், B.Com., B.L., |
| இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட நாள் | 18.06.2026 |
| தீர்ப்பு வழங்கப்பட்ட நாள் | 09.07.2026 |

இவ்வழக்கானது கடந்த 12.02.2024 ஆம் நாள் இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, கடந்த 18.06.2026 ஆம் நாள் என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து, அரசு தரப்பிற்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை– 2 செல்வி R. முருகேஸ்வரி, B.A., B.L(Hons)., கரூர் அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், எதிரிக்காக வழக்கறிஞர் திரு.V.S.விக்னேஷ்வரன், B.Com., B.L., அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று 09.07.2026–ம் நாள் இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

கடந்த 29.07.2020ம் தேதி காலை 05.30 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகள் தமிழக அரசு ஆற்று மணல் அள்ள தடைவிதித்து இருந்த நிலையில் மணல் அள்ளுவதற்கான எவ்வித ஆவணங்களும் உரிமமும் இல்லாமல் வியாபாரம் செய்யும் நோக்கத்துடன் தங்களது இரட்டை மாட்டு வண்டிகளில் மணல் ஏற்றுவதற்கான எவ்வித அரசு அனுமதிச்சீட்டு இல்லாமல் அரசுக்கு இழப்பை ஏற்படுத்த வேண்டும் மற்றும் வியாபாரம் செய்யும் நோக்கத்துடன் காவிரி ஆற்றங்கரையிலிருந்து 0.40 யூனிட் காவிரி ஆற்று மணலை திருடி மாட்டு வண்டிகளில் அள்ளிக்கொண்டு அரசுக்கு இழப்பை ஏற்படுத்தவேண்டும் எனவும் மேலும் பொதுமக்களின் குடிநீர் தேவைக்கு ஆதாரமாக இருக்கும் ஆற்று மணலை திருடி குந்தகம் விளைக்கும் வகையில் திருடியுள்ளதாகவும், எனவே எதிரியின் செய்கையானது இ.த.ச பிரிவு.379 ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக வேலாயுதம்பாளையம் காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண்.486/2020 எதிரிகளின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி குற்றப்பத்திரிக்கை இந்நீதிமன்றக் கோப்பில் C.C.No.70/2024 ஆக எடுக்கப்பட்டுள்ளது.

2) எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானதும், கு.வி.மு.ச 207–ஆவது பிரிவின்படி வழங்கப்பட வேண்டிய அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரிகளிடம் அவர்கள் மீதான இ.த.ச. பிரிவு 379–ன் படியான குற்றச்சாட்டு குறித்து வனைந்து வாசித்து, விளக்கிக் கூறி வினவிய போதும் எதிரிகள், பொய் வழக்கு என்று கூறினார்கள். எனவே, இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்காக உத்தரவிடப்பட்டு அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

4) இவ்வழக்கில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரின் சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளன. அ.சா.ஆ. 1 முதல் அ.சா.ஆ. 8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. மேலும், இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் சாட்சியங்கள் எதுவும் இல்லை.

**5) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–**

i) இவ்வழக்கில் **அ.சா.1** தன் சாட்சியத்தில் " நான் தற்போது க.பரமத்தி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் வேலாயும்பாளையம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கடந்த 29.07.2020 ம் தேதி காலையில் நானும், த.கா. கண்ணன் , ஆய்வாளர் ஜெயராமன் என்பவருடன் ரோந்து அலுவலாக வேலாயுதம்பாளையம், மலைவீதி, பாலத்துறை, பைபாஸ் 4 ரோடு, புகளூர் 4 ரோடு, செம்படாபாளையம் ஆகிய இடங்களில் ரோந்து செய்து கொண்டிருந்தபோது தகவலாளி மூலம் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 05.30 மணிக்கு தோட்டக்குறிச்சி காவிரி ஆற்றுப்படுகை சென்று கண்காணித்த போது அந்த வழியாக வந்த இரண்டு இரட்டை மாட்டு வண்டியிலிருந்து சுமார் தலா 1/4 (0.20) யூனிட் ஆற்று மணலுடன் வந்தாவர்கள் எங்களை கண்டதும் வண்டியிலிருந்து இறங்கி தப்பித்து ஓட முயற்சித்தவர்களை சுற்றி வளைத்து பிடித்து அவர்கள் பெயர் முரளி மற்றும் செல்வம் என்று கூறினார்கள். மணல் அள்ளுவதற்கு எவ்வித ஆவணங்களும் உரிமமும் இல்லாமல் வியாபாரம் செய்யும் நோக்கத்துடன் தோட்டக்குறிச்சி காவேரி ஆற்றிலிருந்து சுமார் 1/2 (0.40) யூனிட் மணலை திருடி எதிரிகளுக்கு சொந்தமான இரண்டு மாட்டுவண்டிகளில் ஏற்றிக்கொண்டு வருவதாக கூறினார்கள். எதிரிகளை காலை 5.30 மணிக்கு கைது செய்தும் தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக ஊரடங்கு அமலில் இருந்து வருவதால் சம்பவ இடத்தில் பொதுமக்கள் யாரும் இல்லாததால் நானும், கண்ணன் என்பவரும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியாக கையொப்பம் இட்டோம். பின்னர் எதிரிகள் மற்றும் கைப்பற்றிய தடயத்துடன் 8.30 மணிக்கு நிலையம் வந்து ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தோம். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மணலுடன் கூடிய மாட்டு வண்டியை தான் ஆய்வாளர் கைப்பற்றியதாகும். இவ்வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். " என சாட்சியமளித்துள்ளார்.

ii) இவ்வழக்கில் **அ.சா.2** தன் சாட்சியத்தில் " நான் தற்போது வேலாயும்பாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்தில் பணிபுரிந்த ஆய்வாளர் ஜெயராமன் என்பவரின் கையெழுத்து எனக்கு பரிச்சயமானது. ஆவணங்கள் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 29.07.2020 ம் தேதி காலையில் , த.கா. கண்ணன், சேகர், ஆய்வாளர் ஜெயராமன் என்பவருடன் ரோந்து அலுவலாக வேலாயுதம்பாளையம், மலைவீதி, பாலத்துறை, பைபாஸ் 4 ரோடு, புகளூர் 4 ரோடு, செம்படாபாளையம் ஆகிய இடங்களில் ரோந்து செய்து கொண்டிருந்தபோது தகவலாளி மூலம் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 05.30 மணிக்கு

தோட்டக்குறிச்சி காவிரி ஆற்றுப்படுகை சென்று கண்காணித்த போது அந்த வழியாக வந்த இரண்டு இரட்டை மாட்டு வண்டியிலிருந்து சுமார் தலா 1/4 (0.20) யூனிட் ஆற்று மணலுடன் வந்தாவர்கள் போலீசாரை கண்டதும் வண்டியிலிருந்து இறங்கி தப்பித்து ஓட முயற்சித்தவர்களை சுற்றி வளைத்து பிடித்து அவர்கள் பெயர் முரளி மற்றும் செல்வம் என்று கூறினார்கள். மணல் அள்ளுவதற்கு எவ்வித ஆவணங்களும் உரிமமும் இல்லாமல் வியாபாரம் செய்யும் நோக்கத்துடன் தோட்டக்குறிச்சி காவேரி ஆற்றிலிருந்து சுமார் 1/2 (0.40) யூனிட் மணலை திருடி எதிரிகளுக்கு சொந்தமான இரண்டு மாட்டுவண்டிகளில் ஏற்றிக்கொண்டு வருவதாக கூறினார்கள். எதிரிகளை காலை 5.30 மணிக்கு கைது செய்தும் தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக ஊரடங்கு அமலில் இருந்து வருவதால் சம்பவ இடத்தில் பொதுமக்கள் யாரும் இல்லாததால் சேகர், கண்ணன் என்பவர்களும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியாக கையொப்பம் செய்தார்கள். பின்னர் எதிரிகள் மற்றும் கைப்பற்றிய தடயத்துடன் 8.30 மணிக்கு நிலையம் வந்து குற்ற எண். 486/2020, ச.பி.379 இ.த.ச r/w 21(1) MMDR Act ன் படி வழக்கு பதிவு செய்துள்ளார். எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வையிடத்தை பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். தொடர்ந்து சாட்சிகளான சேகர், கண்ணன், அய்யப்பன், மணிகண்டன் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பொதுப்பணிதுறையிடம் மணலை ஒப்படைத்து பொதுப்பணிதுறை ஆற்று பாதுகாப்பு பிரிவு மற்றும் கனிமம் கண்காணிப்பு பிரிவில் உதவி பொறியாளராக பணிபுரிந்த சுகுமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் சட்டப்பிரிவை 379 இ.த.ச r/w 21(1) MMDR Act விலிருந்து ச/பி. 379 இதசவாக மாற்றும் செய்து அதன் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்தை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். இத்துடன் ஆய்வாளர் விசாரணையை முடித்து வழக்கு எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். " என சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

**6)** அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்குப் பாதகமான சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச. 313(1)(ஆ)–ஆவது பிரிவின்படி எடுத்துக்கூறி வினவியபோது எதிரிகள் அவற்றை பொய்சாட்சி, பொய் வழக்கு என்றார்கள். எதிரிகள் தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எவரும் இல்லை என்று கூறியதால், எதிரிகள் தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

**7)** இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் முன் வைக்கப்பட்ட வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**8)** இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரிகள் மீது சாட்டப்பட்ட இ.த.ச. பிரிவு 379 ஆவது பிரிவின் படியான குற்றங்களை அரசுதரப்பால் தகுந்த முறையான ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

9) <u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>

கடந்த 29.07.2020ம் தேதி காலை 05.30 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகள் தமிழக அரசு ஆற்று மணல் அள்ள தடைவிதித்து இருந்த நிலையில் மணல் அள்ளுவதற்கான எவ்வித ஆவணங்களும் உரிமமும் இல்லாமல் வியாபாரம் செய்யும் நோக்கத்துடன் தங்களது இரட்டை மாட்டு வண்டிகளில் மணல் ஏற்றுவதற்கான எவ்வித அரசு அனுமதிச்சீட்டு இல்லாமல் அரசுக்கு இழப்பை ஏற்படுத்த வேண்டும் மற்றும் வியாபாரம் செய்யும் நோக்கத்துடன் காவிரி ஆற்றங்கரையிலிருந்து 0.40 யூனிட் காவிரி ஆற்று மணலை திருடி மாட்டு வண்டிகளில் அள்ளிக்கொண்டு அரசுக்கு இழப்பை ஏற்படுத்தவேண்டும் எனவும் மேலும் பொதுமக்களின் குடிநீர் தேவைக்கு ஆதாரமாக இருக்கும் ஆற்று மணலை திருடி குந்தகம் விளைக்கும் வகையில் திருடியுள்ளதாகவும், எனவே எதிரியின் செய்கையானது இ.த.ச பிரிவு.379 ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக, அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றத்தினை நிரூபிக்கும் முகமாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் மற்றும் இருதரப்பு வாதங்களையும் பின்வருமாறு பரிசீலிக்கப்பட்டது.

**10)** இவ்வழக்கின் அ.சா.1 திரு. சேகர், கைப்பற்றுதல் மகசர் சாட்சி ஆவார்கள். அ.சா.2 திரு. கருணாநிதி, இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி திரு. ஜெயராமன்சார்பாக சாட்சியமளித்த நபர் ஆவார்.

**11)** இவ்வழக்கில் சம்பவ நாளான 29.07.2020அன்று தலைமை காவலராக பணியிலிருந்த அ.சா.1, தலைமை காவலர் கண்ணன், ஆய்வாளர் ஜெயராமன் ஆகியோர் தோட்டக்குறிச்சி காவிரி ஆற்றுப்படுகை அருகே வாகனத்தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது அவ்வழியாக வந்த இரண்டு இரட்டை மாட்டு வண்டியை நிறுத்தி சோதனை செய்தபோது அதில் சுமார் 1/4(0.20) யூனிட் ஆற்று மணல் எவ்வித அரசு அனுமதியும் ரசீதும் இல்லாமல் திருட்டுத்தனமாக ஏற்றிவரப்பட்டது எனவும், மேற்படி மணல் திருட்டுத்தனமாக கடத்தி வந்ததாக அரசுத் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

**12)** இவ்வழக்கின் கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.1 மற்றும் அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜரையும் பரிசீலனை செய்யும் போது, அ.சா.ஆ.2

புகைப்படத்தில் கண்ட வழக்கு சொத்துக்களான மாட்டு வண்டிகள் (மாடுகள் இல்லாமல்) மற்றும் மணல் கைப்பற்றப்பட்டுள்ளது என்பது தெரிய வருகின்றது.

**13)** மேலும், அ.சா.ஆ.6 ஆவணத்தை ஆராயும் போது, மேற்படி மணல், பரமத்தி–வேலூர், கனிமம் மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதவி பொறியாளர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது தெரிய வருகின்றது.

**14)** வழக்கு கோப்பு ஆவணங்களை ஆராயும் போது, மேற்படி சம்பவத்தை தொடர்ந்து, 2 ம் எதிரி முன் பிணையில் சென்றுள்ளார் என்பது தெரிய வருகின்றது.

**15)** பொதுவாக காவலர்கள் மட்டுமே சாட்சியாக உள்ள வழக்குகளில், எதிரிகளின் மீதான குற்றச்சாட்டை உறுதி செய்து தண்டிப்பதில் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். இவ்வழக்கில் வாகனத்தணிக்கையில் ஈடுபட்டிருந்த காவலர்களே கைப்பற்றுதல் மகசரில் சாட்சியாக இருந்துள்ளனர். மேலும், அரசு தரப்பில் தனி நபர் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது.

**16)** மேற்கண்ட சங்கதியை பொறுத்து மாண்பமை உச்சநீதிமன்றத்தால், Sathyan Vs. State of Kerala [2023 INSC 703] என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

"22. Conviction being based solely on the evidence of the police officials is no longer an issue on which the jury is out. In other words, the law is well settled that if the evidence of such a police officer is found to be reliable, trustworthy then basing the conviction thereupon, cannot be questioned, and the same shall stand on firm ground."

**17)** மேற்கண்ட வழக்கில் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வழக்கின் பொருண்மையை பரிசீலனை செய்யும் போது, அரசு தரப்பு சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கிணங்க கோர்வையாகவும், தெளிவாகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும், மேற்படி சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கினை நிரூபணம் செய்யும் வகையில் அமைந்துள்ளதால், அரசு தரப்பில் தனி நபர் சாட்சியங்கள் இவ்வழக்கில் விசாரிக்கப்படாததை மட்டும் வைத்து எதிரியின் மீதான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்று தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**18)** எனவே, தனி நபர் சாட்சிகள் விசாரிக்காததால் இவ்வழக்கு பாதிக்கப்படவில்லை எனவும், அதனால் இவ்வழக்கினை நிராகரித்து எதிரிகளை

விடுதலை செய்யும் அளவிற்கு முக்கிய காரணியாக இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**19)** இவ்வழக்கில் மாடுகள் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மாட்டு வண்டிகளில் ஒரு மாட்டு வண்டியை அதன் உரிமையாளர் திரு.முரளி Crl.M.P.No.1638/2020.ல் மாண்புமிகு மாவட்ட நீதிமன்றம், கரூர் அவர்களால் பிறப்புவிக்கப்பட்ட உத்தரவின் பேரில்பெற்று சென்றுள்ளார். மேலும், மேற்படி மாட்டுவண்டிகளில் இருந்த மேற்படி மணல் தனிநபர்களுக்கு சொந்தமானது என்றோ, திருட்டு மணல் இல்லை என்றோ எவ்வித வாதத்தையும் முன்வைக்கவில்லை. ஆனால், அரசு தரப்பில் எதிரிகள் பயன்படுத்திய மாட்டு வண்டியில் மணல் திருடப்பட்டது என வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**20)** எனவே, எதிரிகள் ஆற்று மணலை சட்ட விரோதமாக கொண்டு சென்றுள்ளார்கள் என்ற எதிரிகளின் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கிடமானது என்று முடிவு செய்து அரசுத் தரப்பு வழக்கினை புறம் தள்ளுவதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே மேற்கண்ட சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் எதிரிகளின் மீதான குற்றச்சாட்டினை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**21)** எதிரிகளுக்கு எதிரான மேற்கண்ட குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாலும், இவ்வழக்கு சம்பவம் நடந்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு எதிரிகள் நன்னடத்தை சட்டத்தின் பலனையும், பா.நா.சு.ச பிரிவு 401–ன் கீழான பலனையும் பெறத்தக்கவர் அல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**22)** எதிரிகளுக்கு அளிக்கவிருக்கும் தண்டனை குறித்து 271(2) ன் படி எதிரிகளிடம் வினவியபோது எதிரிகள் பின்வருமாறு பதிலளித்தார்கள். சம்பாதிக்கவோ, அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்த வேண்டும் என்றோ நினைக்கவில்லை என்றும், அவர்களது குடும்பம் அவர்களது வருமானத்தை நம்பியே உள்ளது என்றும், போதிய வருமானம் இல்லை என்றும் அதனால் குறைந்தபட்ச தண்டனை மட்டும் வழங்குங்கள் என்றும் கூறினார்கள்.

**23)** முடிவில் எதிரிகளின் வேண்டுகோள், ஏழ்மைத்தன்மை, வழக்கின் தன்மை மற்றும் நீதியின் நலன் இவைகளை கருத்தில் கொண்டு, எதிரிகளின் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவு 379–ன் கீழான குற்றச்சாட்டின் கீழ்

எதிரிகள் குற்றவாளி என தீர்மானித்து பா.நா.சு.ச பிரிவு 271(2)–ன் படி எதிரிகளுக்கு, தலா ரூ.5,000/–ஐ (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) அபராதமாக எதிரிகள் செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகின்றது. மேற்படி அபராத தொகையை எதிரிகள் செலுத்த தவறும்பட்சத்தில் ஒரு வார காலம் மெய்க்காவல் சிறை தண்டனையை எதிரிகள் அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகின்றது.

**24)** எதிரிகளின் மீது இக்குற்ற சம்பவத்தை தவிர வேறு எவ்வித முன் வழக்குகள் இல்லை என்பதை கருத்தில் கொண்டு, இவ்வழக்கில் ஆர்.பி.எண் 67/2020 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குச் சொத்தான இரண்டு இரட்டை மாட்டு வண்டிகளில் ஒரு மாட்டு வண்டியை இவ்வழக்கின் ம் எதிரி/வழக்கு சொத்தின் உரிமையாளர் 20.11.2020 ம் தேதியிட்ட Crl.M.P.No.1638/2020 ல் பெற்றுச் சென்றுள்ளதை அதன் உரிமையாளரே வைத்துக்கொள்ள இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகின்றது.

**25)** மேலும், இவ்வழக்கில் கைப்பற்றுப்பட்டு வழக்குச்சொத்தாக தாக்கல் செய்யப்பட்ட ஆர்.பி.எண் 67/2020 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குச் சொத்தான இரண்டு இரட்டை மாட்டு வண்டிகளில் இடைக்கால பொறுப்பில் பெற்றுச்செல்லாத மற்றொரு மாட்டு வண்டியை அதன் உரிமையாளரிடம் உரிய ஆதரவை பெற்று கொண்டு, மேல்முறையீட்டு காலத்திற்கு பின் நிரந்தரமாக ஒப்படைக்க உத்தரவிடப்படுகின்றது. மேலும், மேற்படி வாகனங்ளை இனிமேல் மணல் திருட்டு போன்ற குற்ற செயல்களுக்கு பயன்படுத்த கூடாது என உத்தரவிடப்படுகின்றது.

**26)** மேலும், இவ்வழக்கின் வழக்கு சொத்தான மாட்டு வண்டிகளில் இருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் ஆர்.பி.எண் 67/2020 ல் கண்டுள்ள 1/4 யூனிட் மணல் கனிமம் & கண்காணிப்பு பிரிவு உதவி பொறியாளரிடம் ஒப்படைக்கப்பட்டு அதற்கு ஆதரவாக அ.சா.ஆ.6 கடிதமும் இந்நீதிமன்றத்திற்கு வரப்பெற்றுள்ளது. அதனால் மணலை பொறுத்து எவ்வித உத்தரவும் இல்லை.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026 ம் வருடம், ஜூலை மாதம் 09–ம் நாள் இன்று இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

M CHARLES ALBERT
Digitally signed by M CHARLES ALBERT
Date: 2026.07.09 17:35:45 +0530

**நீதித்துறை நடுவர் எண். 2,**
**கரூர்.**

**<u>அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்:–</u>**

| அரசு தரப்பு சாட்சிகளின் வ.எண். | சாட்சிகளின் பெயர் | விவரம் |
|---|---|---|
| 1 | திரு. சேகர் | கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| 2 | திரு. கருணாநிதி | புலன் விசாரணை அதிகாரிக்காக சாட்சியமளித்த நபர் |

**<u>அரசுதரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் :–</u>**

| அ.சா.ஆ. வ.எண். | ஆவணங்களின் விவரம் | குறியீடு செய்யப்பட்டது |
|---|---|---|
| 1. | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.1 |
| 2. | புகைப்படம் | அ.சா.1 |
| 3. | முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 |
| 4. | பார்வை மகசர் | அ.சா.2 |
| 5. | மாதிரி வரைப்படம் | அ.சா.2 |
| 6. | பொதுப்பணியாளரிடம் மணலை ஒப்படைத்த ரசீது | அ.சா.2 |
| 7. | சட்ட மாறுதல் அறிக்கை | அ.சா.2 |
| 8. | படிவம் 91 | அ.சா.2 |

**<u>அரசுதரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றுபொருட்கள்:–</u>**

இல்லை

**<u>எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சி:–</u>**

இல்லை

**<u>எதிரி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் :–</u>**

இல்லை

**<u>எதிரி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றுபொருட்கள்:–</u>**

இல்லை

M CHARLES ALBERT

Digitally signed by M CHARLES ALBERT
Date: 2026.07.09 17:35:55 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**கரூர்.**

**<u>குறிப்பு</u>**

1) வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.

2) எந்த சாட்சியும் 3 வாய்தாவுக்கு மேல் விசாரணைக்காக நிறுத்தி வைக்கப் படவில்லை.

3) வழக்கின் முடிவு slip proceeding காவல் துறையினருக்கு கொடுக்க உத்தரவிடப்பட்டது.